ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2069/19 - 2018 මැයි මස 02 වැනි බදාදා - 2018.05.02

2069/19 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மே மாதம் 02 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சுங்க அறிவித்தல்**

அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை இல. 04/ 2018

***1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்***

*1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றி அவரால் ஆக்கப்பட்ட பின்வரும் கட்டளை அனைவரும் அறியவென இத்தால் வெளியிடப்படுகின்றது.*

*ஆர். எச். எஸ். சமரதுங்க,*
*செயலாளர்,*
*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு.*

*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2018, மே 02.*

***1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்***

*கட்டளை*

*1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், 2018, மே மாதம் 03 ஆந் திகதி தொடக்கம் செயல்வலுவுக்கு வருமாறு இதற்கான அட்டவணையின் 3 ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருள் ஒவ்வொன்றின் மீதும் அட்டவணையின் 5 ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் விதிக்கப்பட்டுள்ள பொது வீதத்தில் அல்லது சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (235 ஆம் அத்தியாயம்) அட்டவணை 'அ' இன் ஏற்பாடுகளின் கீழுள்ள முன்னுரிமை வீதமொன்று விதிக்கப்பட்டு செலுத்தப்படக்கூடியதாக இருக்குமிடத்து அவ்வட்டவணையின் 4 ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் விதிக்கப்பட்டுள்ள முன்னுரிமை வீதத்தில் இறக்குமதித் தீர்வையைக் கோரி அறவிடுமாறு சுங்கப் பணிப்பாளர் நாயகம் அவர்களை, இக்கட்டளை மூலம் கேட்டுக்கொள்கின்றேன்.*

*மங்கள சமரவீர,*
*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.*

*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2018, மே 01.*

**அட்டவணை**

| இ. ப. த. இல. (1) | இ. மு. குறியீடு (2) | | விவரணம் (3) | தீர்வை வீதம் | | அளவுக் கூறு (6) |
|---|---|---|---|---|---|---|
| | | | | முன்னுரிமை (4) | பொது (5) | |
| *14.04* | *1404.90.10* | --- | பீடி இலைகள் | | 30% அல்லது ஒரு கி. கி. ரூபா 750 | கி. கி. |
| *24.03* | *2403.19.20* | --- | பீடி புகையிலை | | 85% அல்லது ஒரு கி. கி. ரூபா 150 | கி. கி. |

*05-511*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.